# பெருநகர சென்னை மாநகராட்சி
# வருவாய் துறை

## <u>சமுதாய நலக் கூடம் முன்பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்/சட்ட திட்டங்கள்</u>

1) சமுதாய நலக்கூடம், சமுதாய மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்காக நாள் வாடகை அடிப்படையில் முன்பதிவு மேற்கொள்ளப்படும். அரசின் கொள்கைக்கு எதிரான, நிகழ்ச்சிகள், மத சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள், இரங்கள் நிகழ்ச்சிகள், அரசியல் கட்சி சார்புடைய நிகழ்ச்சி அல்லது சட்ட விரோதமான நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படமாட்டாது.

2) திருமண நிகழ்ச்சிக்கு மணப்பெண் மற்றும் மணமகன் வயது சான்றிதழுக்காக பிறப்பு சான்றிதழ், TC. ஆதார் சான்றிதழ் ஏதேனும் ஒன்றினை பதிவேற்றம் (Upload) செய்திட வேண்டும்

3) திருமண வரவேற்பு போன்ற நிகழ்ச்சிகளுக்கு மணமகன், மணமகள் புகைப்படம் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

4) திருமணத்திற்கு மணமகனின் வயது 21ம் மணமகளின் வயது 18ம் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

5) பிறந்த நாள் / காதணி விழா / மஞ்சள் நீராட்டு விழா / நிச்சயதார்த்தம் / உபநயனம் திருமணம் மற்றும் வளைகாப்பு போன்ற நிகழ்ச்சிகளுக்கு நிகழ்ச்சிக்கு உரியவரின் புகைப்படம் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

6) குடும்ப நிகழ்ச்சிகளைத் தவிர இதர நிகழ்ச்சிகளுக்கு தனியே விண்ணப்பம் மற்றும் காவல் துறையிடமிருந்து தடையில்லா சான்று இணைக்கப்படவேண்டும்.

7) கட்டணம் செலுத்தும் முறை: வாடகைக் கட்டணம் சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் முன்வைப்புத் தொகை ஆகியவற்றை மொத்தமாக இணையதளம் வாயிலாக (Online) செலுத்தப்பட வேண்டும்.

8) எந்த சூழ்நிலையிலும் அனுமதி உத்தரவு பெற்ற நபரைத் தவிர வேறொருவர் பெயருக்கு உத்தரவினை மாற்ற முடியாது மற்றும் வேறொருவர் நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படமாட்டாது.

9) விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்த ஒரு நிகழ்ச்சியும் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது,

10) அரசியல் கட்சி கொடிகள், டிஜிட்டல் பேனர்கள், விளம்பர பலகைகள் பொருத்த அனுமதிக்கப்படமாட்டாது.

11) பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக அலுவல் சார்ந்த கூட்டங்கள், இயற்கை இடற்பாடுகளின்போது மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகள் மற்றும் தேர்தல் பணிகள் போன்ற தவிர்க்க முடியாத அவசர அவசியம் மற்றும் முக்கிய நிகழ்வுகளில் சமுதாய நலக்கூடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவைப்படின் குறுகிய கால முன் அறிவிப்புடன் அல்லது முன்அறிவிப்பின்றி ஏற்கனவே முன்பதிவு செய்த நிகழ்ச்சி ரத்து செய்யப்படும்.

12) முன்பதிவு ஆணை பெற்றவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் சின்னம் மற்றும் பெயரை உபயோகப்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது.

13) பெருநகர சென்னை மாநகராட்சியின் நற்பெயருக்கு குந்தகம் ஏற்படாத வகையில் நிகழ்ச்சி நடத்தப்பட வேண்டும்.

14) மின்சாரம் தடைப்பட்டால் பெருநகர சென்னை மாநகராட்சி எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது.

15) நிகழ்ச்சி முடிந்ததும் சமுதாய நலக்கூடம் / கலையரங்கத்தில் உள்ள மாநகராட்சி பொருட்களுக்கு எந்தவித சேதாரமும் இன்றி மற்ற அனைத்து பொருட்களும் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

16) நிகழ்ச்சி முடியும் வரை சமுதாய நலக்கூடம் மற்றும் இதர சாமான்களை நிகழ்ச்சிதாரர்களே சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

17) சமையல் செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் மட்டுமே சமையல் செய்ய வேண்டும்.

18)நிகழ்ச்சிதாரர்களின் வாகனங்கள் மற்றும் சொத்துக்களின் சேதங்களுக்கோ திருட்டுகளுக்கோ பெருநகர சென்னை மாநகராட்சி எந்தவிதத்திலும் பொறுப்பேற்றுக் கொள்ளாது.

19) சமுதாய நலக்கூடத்தின் பாத்திரங்கள் மற்றும் இதர பொருட்கள் மற்றும் மேஜை நாற்காலி ஆகியவற்றை எக்காரணத்தைக் கொண்டும் வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. சுவரில் ஆணி அடிக்கக்கூடாது. போஸ்ட்டர், ஸ்டிக்கர் மற்றும் நோட்டீஸ் ஒட்டக்கூடாது.

20) நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்பட்ட மின் கட்டணத்திற்கான தொகையானது வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு மீதமுள்ள தொகை சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கு வங்கி கணக்கின் மூலம் வழங்கப்படும்.

21) எக்காரணத்தைக் கொண்டும் முன்பதிவினை ரத்து செய்யப்படமாட்டாது. (வரிசை எண்.12ல் குறிப்பிட்டவற்றைத் தவிர) விண்ணப்பதாரரால் ரத்து செய்யக் கோரும்பட்சத்தில் வாடகை கட்டணம், சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக முன்வைப்புத் தொகை மட்டுமே திரும்ப வழங்கப்படும்.

22) சமுதாயநலக்கூடத்தின் சுற்றுப்புறத்தினை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். சமுதாய நலக்கூடத்தின் பக்கத்திலுள்ள வீடுகளில் எச்சில் துப்புவது, இலைகள் மற்றும் இதர பொருட்கள் போன்றவைகளை போட்டு அகத்தம் செய்யக்கூடாது.

23) சமுதாய நலக்கூடத்திற்கு வெளியில் ஒலிபெருக்கிகளை உபயோகப்படுத்தக்கூடாது. ஒலி பெருக்கியின் முகப்பு சமுதாய நலக்கூடத்தின் உட்புறம் நோக்கி பொருத்தப்பட்டு குறைந்த ஒலியில் பயன்படுத்தப்படவேண்டும். இந்த விதிகளை மீறினால் மின் இணைப்பு துண்டிக்க நேரிடும்.

24) சமுதாய நலக்கூடம் வாடகைக்கு பெற வரும் விண்ணப்பங்களை அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு பூரண உரிமை உண்டு.

25) சமுதாய நலக்கூடம் முன்பதிவினை விண்ணப்பதாரரால் ரத்து செய்யக்கோரும்பட்சத்தில் விண்ணப்பதாரர் கோரும் வேறு நாளில் அதே சமுதாய நலக்கூடம் ஏற்கனவே முன்பதிவு செய்யாமல் காலியாக இருக்கும்பட்சத்தில் கூடுதல் கட்டணம் ஏதும் இன்றி வேறு தேதியில் முன்பதிவு செய்வதற்கு ஒரு முறை மட்டும் அனுமதிக்கப்படும்.

26) நிகழ்ச்சிக்காக பெறப்பட்ட மாநகராட்சி பாத்திரங்கள் மற்றும் இதர பொருட்கள், மேஜை நாற்காலி ஆகியவற்றை நிகழ்ச்சி முடிந்தபின்னர் பத்திரமாக திருப்பி மாநகராட்சி வசம்

ஒப்படைக்கப்படவேண்டும். மேற்படி பொருட்கள் சேதமுற்றாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கான தொகையை நிகழ்ச்சிதாரர் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

27) நிபந்தனைகளை கண்காணிக்கும் பணி மற்றும் சமுதாய நலக்கூடம் ஆகியவற்றின் பராமரிப்பு பணிகள் அனைத்தும் தொடர்ந்து சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.